முழுப் பதிப்புரிமையுடையது **All Rights Reserved** 

**கல்வியமைச்சு – E Thaksalawa** **மாதிரி வினாப்பத்திரம் - 01**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)**

**General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II** **ஒரு மணித்தியாலம்**

**Tamil Language and Literature I, II** **One hours**

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "காலப் புனல்கனக்கும் கண்ணீரையும் சுமந்து" - இங்கு "**புனல்**" என்பது
   (1) உலகம் (2) நெருப்பு (3) நீர் (4) மண்

2. "எறிந்த வேல் மெய்யதா வால் குழைக்கும்" - இங்கு "**மெய்**" என்பது
   (1) வாய்மை (2) உடம்பு (3) உண்மை (4) கரணம்

3. 'எட்டுடையானும் இரவாது தான் ஈதல்' - இங்கு **ஈதல்** என்பதன் எதிர்க்கருத்து
   (1) அளித்தல் (2) உவத்தல் (3) ஏற்றல் (4) வள்ளல்

4. "வாதத்திற்கு வந்திருந்தவர்களில் இருந்தவர்கள் இருந்தே விட்டார்கள்" -இங்கு **வாதம்** என்பதன் எதிர்க்கருத்து
   (1) தர்க்கம் (2) பிரதிவாதம் (3) விவாதம் (4) பிறவாதம்

5. பின்வருவனவற்றில் பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு
   (1) உபாத்தியாயர் - ஆசிரியர் (2) அரசன் – புரவலன்
   (3) எழுதுவினைஞர் - லிகிதர் (4) சான்றோர் - உறவினர்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

6. "பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம்" அப்பீல் (Appeal) என்ற சொல்லின் கலைச்சொல்
   (1) மேன்முறையீடு (2) பிரச்சினை
   (3) ஆட்கொணர்வுமனு (4) அழைப்பாணை

7. "உன்னை அடையாட்டிக் காட்டுப்பள்ளி" இங்கு **காட்டுப்பள்ளி** என்பது குறிக்கும் பொருள்
   (1) காட்டில் உள்ள படுக்கை (2) பாடசாலையைக் கட்டுதல்
   (3) மயானம் (4) இறைவனது இருப்பிடம்

8. தாள் என்ற இலை மரபைக் கொண்டமைந்தவை
   (1) தென்னை, மா (2) தாளை, கமுகு
   (3) புல், கரும்பு (4) நெல், புல்

9. "வான முட்ட ஏலேலோ நிற்கிறானே ஜலசா….”- இங்கு இடம்பெற்றுள்ள ஒலிக்குறிப்புச் சொல்
   (1) முட்ட (2) ஓடிஓடி (3) வேணும் (4) ஜலசா

10. மிளகாய் வித்துக்குரிய மரபுப்பெயர்
    (1) முத்து (2) மணி (3) கொட்டை (4) விதை

11. பின்வருவனவற்றுள் இணைமொழி அல்லாதது
    (1) பச்சைப் பசேல் (2) தோட்டந்துரவு (3) சூதுவாது (4) இன்னார் இனியார்

12. பின்வருவனவற்றுள் **தெலுங்குமொழிச்** சொல்லாக அமைவது.

(1) பட்டறை (2) சமாளித்தல் (3) சிப்பந்தி (4) பீரோ

13. விரை, கந்தம், மணம் என்னும் சொற்கள் குறிக்கும் பொருள்

(1) வேகம் (2) வாசனை (3) விரும்பு (4) கல்யாணம்

14. ‘‘கண்ணான மச்சிவந்தென் காலூன்றக் கண்டேனே’’ இங்கு ‘‘காலூன்றுதல்’’ என்ற மரபுத்தொடர் தரும் பொருள்

(1) பயம்கொள்ளுதல் (2) உறுதியாக நிற்றல்
(3) நிலைகொள்ளுதல் (4) நினைவிற்கொள்ளுதல்

15. போலி நாகரிகம் என்னும் பொருள் தரும் பழமொழி

(1) இக்கரைமாட்டுக்கு அக்கரைப் பச்சை
(2) பேச்சுப்பல்லக்கு தம்பி கால் நடை
(3) உப்பிட்டவரை உள்ளளவும் நினை
(4) உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

16. எருமை வாங்கும் முன் நெய்க்கு விலை பேசாதே. என்ற பழமொழியின் கருத்து

(1) விடாமுயற்சி பயனைத் தரும் (2) சந்தர்ப்பத்தைத் தவறவிடக் கூடாது
(3) வறுமையிலும் செம்மை (4) அளவுகடந்த கற்பனை கூடாது

17. திறமையானவரைக் கண்டு அவரின் புகழை வியத்தல் என்பதற்குப் பொருத்தமான அருஞ்சொற்றொடர்

(1) கண்ணுக்குக் கண்ணாக (2) ஒல்காப்பெரும் புகழ்
(3) கருவிலே திருவுடையோன் (4) நுண்மாண் நுழைபுலம்

18. நெருக்கமாக இருத்தல் என்னும் பொருளைத் தரும் உவமைத்தொடர்

(1) நகமும் சதையும் போல (2) பசுமரத்தாணி போல
(3) அத்தி பூத்தாற் போல (4) குடத்துள் விளக்குப் போல

19. இளமைக் காலத்திலேயே ஒழுக்கமாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும். வயதானபின் திருத்த முடியாது என்பதை வலியுறுத்தும் பழமொழி

(1) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
(2) அஞ்சிலே வளையாதது ஐம்பதில் வளையுமா?
(3) ஆறிலும் சாவு நூறிலும் சாவு
(4) தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்

20. பயனற்ற செயலை உணர்த்தும் உவமைத்தொடர்

(1) அத்திபூத்தாற்போல
(2) ஆனை வாயிற் கரும்பு போல
(3) ஆற்றில் கரைத்த புளி போல
(4) ஆனை உண்ட விளாம்பழம் போல

- **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. பின்வருவனவற்றில் தெரிநிலை வினைப்பகுபதம்
(1) பொன்னன் (2) நடந்தான் (3) பெரியன் (4) அறிஞன்

22. உடனிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்ற சொல்
(1) கஞ்சன் (2) தலைவன் (3) கொக்கு (4) தங்கை

23. பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயரடையாக அமைவது
(1) அமர்ந்து (2) சுவையான (3) விரைவாக (4) எந்தவிதமான

24. ஆறாம் வேற்றுமையின் திரிபின் ஆக்கத் தற்கிழமையாக அமைவது
(1) கறியினது சுவை (2) கண்ணனது கருமை
(3) கோதுமையினது மா (4) குமரனது நாள்

25. கெடுதல் விகாரம் மட்டும் இடம்பெற்றிருப்பது
(1) காற்சலங்கை (2) மரவேர் (3) பொன்மகள் (4) மாங்கனி

26. நாளை வரமாட்டான் - இங்கு **வரமாட்டான்** என்பது
(1) தன்மை வினைமுற்று (2) முன்னிலை வினைமுற்று
(3) படர்க்கை வினைமுற்று (4) மூவிடத்துக்கும் பொதுவான வினைமுற்று

27. வினையாலணையும் பெயர் கொண்டமைந்த சொல்
(1) வந்தனன் (2) வந்திலன் (3) வந்தான் (4) வந்தவன்

28. அகராதி ஒழுங்கில் அமையாத சொற்தொகுதி
(2) குடம், தண்ணீர், பானை, மனை (2) ஞிமிறு, நாய், யானை, பாகன்
(3) காவலாளி, கைதி, சிறை, யன்னல் (4) மாகாணம், மீசாலை, முல்லை, மைலங்காடு

- **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்தொகுதியைத் தெரிவு செய்க.**

29. (1) இடுகுறிப்பெயர் : மரம், கடல், மண்
(2) காரணப் பெயர் : பறவை, மண்வெட்டி, அந்தணன்
(3) காரணப் இடுகுறிப் பெயர் : முள்ளி, முக்கண்ணன், நாற்காலி
(4) மரபுப் பெயர் : கன்று, குட்டி, பிள்ளை

30. (1) ஆக்கப் பெயர் : முதலாளி, பெண்ணியம், காட்சி
(2) கூட்டுப் பெயர் : நீர்வீழ்ச்சி, கடலலை, பொரியல்
(3) தொழிற் பெயர் : பாடுதல், ஆடுதல், போகாமை
(4) வினையாலணையும் பெயர் : வந்தவன், உண்டவன், படித்தவன்

- **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. பாடசாலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது பாடசாலைச் சமூகத்தின் பொறுப்பாகும்,என கல்வி அமைச்சால் பாடசாலைகளுக்கு ........................................... அனுப்பிவைக்கப்பட்டது
(1) துண்டுப்பிரசுரம் (2) அறிக்கை (3) சுற்றுநிருபம் (4) கடிதம்

32. ஒருபொருள் குறித்த பல சொல்லையும் பல பொருள் குறித்த ஒரு சொல்லையும் குறித்து நிற்பதை ................................................... என அழைப்பர்

(1) அகராதி (2) திரிசொல்
(3) வாழ்வியற்களஞ்சியம் (4) நிகண்டு

33. பாராளுமன்றத் தேர்தலுக்காக ................................................ பொதுமக்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன

(1) வாக்காளர் அட்டைகள் (2) அனுமதி அட்டைகள்
(3) கடிதங்கள் (4) அழைப்பிதழ்கள்

34. அரசாங்கத்தின், புதிய வீட்டுத்திட்டத்திற்கான ஒப்பந்தம் கட்டுமானப் பணியாளர்களிடமிருந்து பெறுவதற்கான விளம்பரம் ........................................... வெளிவந்துள்ளது.

(1) சுற்றுநிருபத்தில் (2) வெள்ளையறிக்கையில்
(3) பாராளுமன்றத்தில் (4) வர்த்தமானியில்

- **வாக்கியத்தின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க**

35. வெயிலின் கொடுமை தாங்காமல் எல்லா விலங்குகளும் தாகத்தால் .......................................

(1) வாடும் (2) வாடுது
(3) வாடுகின்றன (4) வாடுகின்றது

36. மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் மக்களுடன் ..............................

(1) ஆலோசித்தது (2) ஆலோசிக்கும்
(3) ஆலோசித்தார் (4) ஆலோசித்தன

- கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

மன்னர் விழித்தாமரை பூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்கான் - மின்னிறந்த
செய்யதான் வெள்ளைச் சிறையன்னம்
செங்கமலப் பொய்கை வாய்ப் போவதே போன்று

37. விழித்தாமரை என்பதில் இடம்பெற்றுள்ள அணி யாது?

(1) உவமை அணி (2) உருவக அணி
(3) சிலேடைஅணி 4) எதுகைஅணி

38. கமலம் என்பதன் பொருள் யாது?

(1) அல்லி (2) கயம்
(3) சிவப்பு (4) தாமரை

39. ''வெள்ளைச் சிறையன்னம்'' - இங்கு ''வெள்ளை'' என்பது

1) குணப்பெயர் 2) பொருட்பெயர் 3) தொழிற்பெயர் 4) தொழிலாகுபெயர்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுப்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ. இவர்கள் மூவரும் இராமன், பரதன், இலக்குமணன், சத்துருக்கன் ஆகியோரைப் பெற்றெடுத்தனர்.
ஆ. தசரதன் அயோத்தி நாட்டை ஆண்டான்.
இ. குருகுலத்தில் வசிட்டரிடமும் பிற ஆசான்களிடமும் நான்கு பிள்ளைகளும் கல்வி கற்றனர்.
ஈ. அவன் மன்னுயிரை நேசிக்கும் அறநெஞ்சினன்
உ. கோசலை, கைகேயி, சுமித்திரை என்போர் அவன் மனைவியர்.

1. ஆ, இ, அ, ஈ, உ 2. ஆ ,ஈ, உ, அ, இ
3. ஆ, இ, ஈ, உ, அ 4. ஆ ஈ, உ, இ, அ

**கல்வியமைச்சு – E Thaksalawa** **மாதிரி வினாப்பத்திரம் - 03**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)**

**General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II**

**Tamil Language and Literature I, II**

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

**கவனிக்க :**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

ii. இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

1. சுருக்கமான விடை எழுதுக.

i. பின்வரும் தொடரை சந்திபிரித்து எழுதுக.

"விலங்கியற்கையிலை யெனில் யாமெல்லாம்"

ii. பாடசாலையில் இருந்து வீட்டுக்குச் சென்றேன்.
கவலையிலிருந்து என்னால் விடுபட முடியவில்லை.

இவ்விரு வாக்கியத்திலும் இடபெறும் நீங்கல் பொருள் எவ்வகையைச் சார்ந்தது?

iii. பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக்குறிகளையிட்டு அதனை மீண்டும் எழுதுக

சிறுமி என்னை இவ்வடக்கு முறையிலிந்து காப்பாற்றுவார்கள் யாருமில்லை என அழுதாள்

iv. "கம்பனால் எழுதப்பட்ட கவிதை அழகானது."

பின்வரும் வாக்கியத்தின் எழுவாய் பயனிலை என்பவற்றைக் குறிப்பிடுக.

v. பின்வரும் நிகழ்ச்சி நிரலை ஒழுங்கு வரிசைப்படுத்தி எழுதுக.

வரவேற்புரை, நன்றியுரை, ,தலைமையுரை, பிரதம அதிதி உரை, மங்கள விளக்கேற்றல்

vi. பொருத்தமான இணைப்பிடைச் சொற்களை பயன்படுத்தி பின்வரும் வாக்கியங்களை இணைத்து ஒரே வாக்கியமாக எழுதுக.

அவன் நன்கு படித்தான்.
அவன் சித்தி எய்தவில்லை.

vii. "நாங்கள் இதை செய்ய மாட்டோம்." என்ற எதிர்மறை வாக்கியத்தை உடன்பாட்டு வாக்கியமாக எழுதுக.

viii. "இது நல்ல படம் சேர் தான் போய் பார்க்க சொன்னவர்."

பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கு சொற்களில் மாற்றி எழுதுக.

ix. "பிள்ளை கனியமுதே கண்ணம்மா பேசும் பொற்சித்திரமே..." இங்கு இடம் பெறும் அணியை எழுதுக

x. ஒவ்வொரு பிள்ளைகளும் திறமையுள்ளவராக இருக்க வேண்டும். இவ்வாக்கியத்தை வழு நீக்கி எழுதுக.

(20 புள்ளிகள்)

[பக்.2 ஐப் பார்க்க

முழுப் பதிப்புரிமையுடையது **All Rights Reserved** 

2. பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவு செய்து ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடையெழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்கு பொருத்தமான தலைப்பு இடுக.

i. போதைப் பொருள் பாவனை இன்று வயது வேறுபாடின்றி குறிப்பாக ஆண் பிள்ளைகளை அடிமைப்படுத்தியுள்ளது. அதனால் எதிர்காலம் குறித்த இலட்சிய வாழ்வு மாணவப் பருவத்திலேயே திசைத் திருப்பப்படுகின்றது. இன்று அரசாங்கம் இது தொடர்பில் விழிப்புணர்வுடன் செயற்பட்டு போதைப் பொருளை முற்றாக ஒழிப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. இதற்கு மாணவர்களின் பங்களிப்பும் மிக அவசியமானது. இவ்விடயம் தொடர்பில் உமது கருத்துக்களை உள்ளடக்கிய ஒரு **விளக்கக்கட்டுரை.**

ii. வெளிநாட்டு மோகம் இன்று யாவரையும் பீடித்துள்ளது சட்டத்திற்கு முரணாகச் செல்பவர்களை விடவும் இலங்கையின் இலவசக் கல்வி கற்று உயர் கல்விக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் பல்கலைக்கழகப் படிப்பு நிறைவடைய பட்டப்பின் படிப்புக்காக வெளிநாடு சென்று தம் வாழ்வை அங்கேயே நிரந்தரமாக்கி விடுகின்றனர். ஒரு மாணவனுக்கு முன்பள்ளி முதல் பல்கலைக்கழக பட்டப்படிப்பு வரை இலட்சக்கணக்கில் செலவு செய்யும் தாய் நாட்டிற்கு அறிவுடையவர்களே இத்தகைய செயல்களைச் செய்வது உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வதற்கு ஒப்பானது என்ற தொனிப்பொருளில் ஓர் **உரையாடல்.**

iii. ஆண் பெண் இருபாலரும் வேலைக்கு செல்வதன் மூலமே இன்றைய வாழ்க்கைச் செலவை ஈடு செய்யக்கூடியதாக உள்ளது. இதனால் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் பெற்றோரின் அரவணைப்பும் பாதுகாப்பும் முறையாகக் கிடைக்கத் தவறிவிடுகின்றன. இளம் பராயத்திலேயே தனித்து விடப்படும் இவர்களின் எதிரகாலம் கேள்விக் குறியாகிவிடுகின்றது. சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு முழு சமுதாயத்திற்துமே உரியதொறு என்ற கருத்தை வலியுறுதி சிறுவர் அமைப்பின் செயலாளர் என்ற வகையில் நீர் ஆற்றும் **சொற்பொழிவு**.

iv. மணல் நிறைந்த கடற்கரைதான் அவர்களின் முற்றம். நீச்சல் கைவந்த கலையாகி விட்டது. கடலன்னையின் தாலாட்டில் சீவனம் செய்யும் அவர்களின் கனவுகளும் கடலைப்போல பரந்தது. ஆழமானது. தம் கனவுகளின் ஈடேற்றத்திறகாய் உயிரைப் பணயம் வைத்து மீன் பிடித்தும் படகுச் சொந்தக்காரர்களே சொகுசாக வாழும் நிலை பரந்தாமன் குடிசையிலிருந்து வெளியே வந்து கடலைத் தரிசிக்கிறான் தன் குடும்பத்தின் விடியலுக்காய் என்ற தொனிப்பொருளின் ஒரு **சிறுகதை**.

(25 புள்ளிகள்)

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

பல துளி பெரு வெள்ளம் ஆவது போல் சிறிது சிறிதாக அறிந்துகொள்ளப்பெறும் கருத்துக்கள் ஒன்று சேர்ந்தே நிரம்பிய அறிவாகிறது. பழைய கருத்துக்களும் புதிய கருத்துக்களும் ஒன்றுபட்டுத் திருத்தமாகத் தொடர்புறுதலிலே அறிவின் வளர்ச்சி பொறுத்திருக்கிறது. ஆதலால் அறிவன் வளர்ச்சிக்கென அமைக்கப்படும் பாடங்கள், பொருள்கள் முதலியவை மாணவர்களின் முன்னறிவோடு ஒன்றுபட வேண்டும். அன்றியும் கற்பிக்கப்படுபவை படிப்படியாகவும் விளக்கமாகவும் அமைய வேண்டும். முன்கருத்துக்கள் விளக்கமாக இல்லாதவிடத்து, அவை பின்வருபவற்றோடு நன்கு ஒற்றுமையுறா இங்ஙனம் ஒற்றுமையுறாத பொருள்களில் மாணவர்க்குக் கவர்ச்சிக்கு நினைவு ஆற்றல் இன்றியமையாதது. ஆதலின் கற்பிக்கும் பொருள்கள் மறவாமல் இருத்தற்குரிய விதிகளைக் கையாளவேண்டும். கற்கும் பொருள்களில் ஊக்கமும் உள்ளக் கிளர்ச்சியும் தன் முயற்சியும் உண்டாகுமாறு மிகுதியாக முயன்று வேலை செய்யும்படி தூண்ட வேண்டும். பொருள்களை அவரவர் நிலைக்கு ஏற்றவாறு நன்கு சிந்திக்கும்படியும் மாணவரை ஏவி, ஆசிரியர் உரு வழிகாட்டியாய் மட்டும் நின்று உதவி புரிய வேண்டும். காலச் சுருக்கம் கருதி ஆசிரியரே எல்லாவற்றையும் கூறிவிடுதல் கூடாது. தன் முயற்சியின்றிக் கற்பிக்கப்படும் மாணவனுக்கும், உடல் உழைப்பின்றி ஊட்டி வளர்க்கப்படும் ஒருவனுக்கும் வேற்றுமையில்லை. இளமையிலே அறிவினால் விளையும் நற்பயன்களை மாணவர் நன்குணருமாறு செய்துவிட்டால், பயன் காணப்படும் பொருள்களில் அவாவும் முயற்சியும் தோன்றிக் காரிய வெற்றியாதல் இயல்பன்றோ? இங்ஙனம் மாணவனது அறிவு வளர்ச்சிக்கு உரியன என்று காணக்கிடக்கும் பற்பல முறைகளையும் தமிழாசிரியர்களும் மேற்கொள்ளலாம்.

(10 புள்ளிகள்)

[பக்.3 ஐப் பார்க்க

4. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

ஆக்கங்கள் அனுபவச் செழுமைகளை உணர்வெழுச்சியுடன் வெளிப்படுத்துவன. வாழ்வில் இருந்து பிறந்து ஏனையவர்களது வாழ்வைச் செப்பனிட ஏற்றதாக படைப்பாக்கம் மிளிர்கிறது என்ற வகையில் அவை குறித்த கருத்துக்கள் சமூகத்தில் உணர்வைத் தூண்டும் சிறுபொறிகள் போன்ற பண்புடையன. நல்ல படைப்புகள் உணர்வு காட்டும் தீமைகளை எரிக்கும் கேடானவை மனித சமூகத்தையே வெந்து சாம்பலாய் நாசமாக்க வல்லன. அவை குறித்த விமரிசனங்கள், பக்கச் சார்பின்றி துணிச்சலுடன் வெளிப்பட அவசியம் உள்ளன.

தமிழின் மரபு ரீதியான விமரிசனத்துக்கு உதாரணமாகக் கூறப்படும் நக்கீரன் கதை இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தருமிக்கு பொற்கிழி வழங்க வேண்டும் என்பதற்காக இறைவனே பாடலை எழுதிக்கொடுக்கின்றார். பாடலில் தவறு இருப்பதாக நக்கீரன் கூற இறைவனே சபைக்கு அழைத்து வருகிறார் தருமி நெற்றிக் கண்ணை காட்டிய போதும் அச்சம் கொள்ளாத நக்கீரன் "குற்றம் குற்றமே" என இடித்தரைக்கின்றார். திருவிளையாடல் புராணத்தில் இடம்பெற்ற இக்கதை குறித்து வாதப்பிரதிவாதங்கள் காணப்பட்ட போதிலும் விமரிசகர்களுக்கும் இருக்க வேண்டிய அஞ்சாமைக்கு உதாரணமாக எப்போதும் இது முன்வைக்கப்படுவம் உண்டு.

i. சிறுபொறிகள் என்பதன் விளக்கம் என்ன?

ii. படைப்புக்களுக்கு பக்கச்சாரபின்றி துணிச்சலுடனான விமரிசனம் ஏன் அவசியம்?

iii. விமரிசகன் எப்போதும் அஞ்சாமல் இருக்க வேண்டும் என்பதற்கு முன்வைக்கப்படும் உதாரணம் எது?

iv. படைப்பாக்கம் எவ்விடயங்களுக்கு ஏற்றதாக மிளிர்கிறது?

v. நெற்றிக்கண்ணைக் காட்டிய போதும் "குற்றம் குற்றமே" என நக்கீரன் கூறக்காரணம் என்ன?

(10 புள்ளிகள்)

5. கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து 100 சொற்களுக்கு குறையாது எழுதுக.

i. மக்கள் தொண்டு நிறுவனத்தின் வெளிக்கள உத்தியோகத்தராக உம்மைக் கருதிக்கொண்டு குறித்த கிராமத்தில் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகிய மாணவர்கள், நடைமுறைச் சூழலில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அதற்கான காரணங்கள், அவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகள் என்பனவற்றை உள்ளடக்கிய **100** சொற்களில் **அறிக்கை** ஒன்று தயாரிக்குக.

**அல்லது**

ii. இன்று நகரங்களிலும் கிராமங்களிலும் பல கழிவகற்றல் முறை அறிமுகப்படுத்தப்பட்ட போதும் பொதுமக்கள் அதனை பின்பற்றுவது மிகக்குறைவாக உள்ளது. இதனால் கழிவுகள் வீதிகளிலும் வடிகால்களிலும் குவிந்து துர்நாற்றம், நோய்ச்சூழல், சூழல் மாசடைதல் எனப் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அத்துடன் கழிவகற்றுவதிலும் உரிய நடைமுறைகளை முன்னெடுக்க முடியவில்லை. எனவே, பொதுமக்களும் அதிகாரிகளும் உரிய ஒழுங்கு முறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு ஏற்ற வகையில் விழிப்புணர்வு செயலமர்வு ஒன்றை மேற்கொள்ளுமாறு உமது பிரதேச கழிவகற்றல் அதிகாரிக்கு **கடிதம்** ஒன்றை **100** சொற்களில் எழுதுக.

(15 புள்ளிகள்)

***

**கல்வியமைச்சு – E Thaksalawa** **மாதிரி வினாப்பத்திரம் - 03**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)**

**General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் III** **இரண்டு மணித்தியாலம்**

**Tamil Language and Literature III** **Two hours**

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

**கவனிக்க :**

- அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை தருக.

i. ‘எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது’

அ. இப்பாடலைப் பாடியவர் யார்?

ஆ. இங்கு இனிமை தரும் செயலாகக் குறிப்பிடப்படுவது யாது?

ii. ‘நான் என்ரை டைரக்டரியில் தேடிக்கொண்டே வந்தேன். இது வந்திருக்கு’

அ. ‘டைரக்டரி’ என்னும் சொல்லின் தமிழ் வடிவம் யாது?

ஆ. ‘இது’ என்பது எதனைக் குறிக்கின்றது ?

iii. ‘கூனல் இளம் பிறை முடித்த வேணியலங்காரர்
குற்றால திரிகூட மலையெங்கள் மலையே’

அ. ‘கூனல் இளம் பிறை’ என்பதன் பொருள் என்ன?

ஆ. வேணியலங்காரர் எனச் சிறப்பிக்கப்படுபவர் யார்?

iv. ‘நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்’

அ. இங்கு குறிப்பிடப்படும் பேதையின் செயல்கள் எவை?

ஆ. ‘நார்’ என்பதன் பொருள் யாது?

v. ‘அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ தொடித்தலை..’

அ. இப்பாடலடி எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

ஆ. இங்கு வெளிப்படும் உணர்வு யாது?

vi. ‘அத்திறம் நிற்க’ என்பது தேவி கூறிய விடையாகும்.

அ. ‘தேவி’ எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

ஆ. இக்கூற்றின் கருத்து யாது?

vii. ‘அவர் விறகொடிக்க, நான் காட்டுக்குள் அலைந்து
விளாம்பழம் பொறுக்குவேன்’

அ. விறகொடித்தவர் யார்?

ஆ. விளாம்பழம் பொறுக்கியவர் யார்?

viii. ‘இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகனாயலன்’
அ. இக்கூற்று இடம்பெறும் நூல் எது?
ஆ. மறுமைக்கு உதவியாக இருப்பது எது?

ix. ‘தந்தை கட்டிய கூடு.. புறாக்குஞ்சுகளைப் போல வளர்த்தார்’
அ. இங்கு ‘தந்தை’ எனக்குறிப்பிடப்படுபவர் யார்?
ஆ. ‘புறாக்குஞ்சுகள்’ எனக்குறிப்பிடப்படுவோர் யாவர்?

x. ‘தம்பெருமை தாமறியாத் தஞ்சமிலாப் பெண்கடமை
வெம்புலிவாய் மானென்ன வீணே கொடுத்திடுவார்…’
அ. வீணே கொடுக்கப்பட்டோர் யார்?
ஆ. இங்கு பயின்றுள்ள அணி யாது?

(20 புள்ளிகள்)

2. பின்வரும் செய்யுள் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

i. என்றலுமே யடியின்மிசை நெடிது வீழ்ந்
தழுவானை யிவன்யா ரென்று
கன்றுபிரி காராவின் றுயருடைய
கொடிவினவக் கழற்கான் மைந்த
னின்றுணைவ னிராகவனுக் கிலக்குவற்கு
மிளையாவதற்கு மெனக்கு மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பா
னிந்தநின்ற குரிசி லென்றான்.

அ. குகனின் பெருமை எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
ஆ. கோசலையின் துயர் வெளிப்படுமாற்றை விளக்குக.

ii. ஆடிக் குடத்தடையு மாடும்போ தேஇரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும் - ஓடி மண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது.

அ. சிலேடை அணி மூலம் தொடர்புபடுத்தப்படுபவை எவை?
ஆ. அவ்விரண்டுக்கும் இடையிலான ஒத்த இயல்புகளை எடுத்துக்காட்டுக.

iii. பனிக்கூட்டம் விரட்டிவரும் பகலவனின் வீரம்
பசிக்கூட்டம் விரட்டிவரும் பண்புமிகு ஈரம்
கனிக்கூட்டம் அசைந்தாடும் கனிமரத்தின் சோலை
கருமுகில்கள் தவழவரும் கார்கால மாலை
தனித்துநின்று சத்தியத்தால் தலைநிமிரும் மனிதன்
தற்பெருமை கொள்ளாது தலை தாழும் அறிஞன்
இனித்தாலும் கசந்தாலும் இன்முகத்தைக் காட்டும்
இல்லாளின் இயற்கையெழில் என்மனதை வெல்லும்

அ. கவிதையில் இடம்பெறும் இயற்கை எழிலை எடுத்துக்காட்டுக.

ஆ. மனிதர்களின் உயர்பண்புகளாக எடுத்துக்காட்டப்படுபவை எவை?

iv. அக்கூட்டத்திற்கு தலைமை வகிக்க வேண்டியவர்கள் ஆறுமுகநாவலர் அவர்கள். ஆனால் அன்று அவர் தலைமை வகிக்கவில்லை. அந்த வித்தியாசாலை மண்டபத்தில் ஒரு பக்கத்தில் ஒரு தூணுக்கு அருகிலே திண்டுத் தலையணை ஒன்றில் அடிக்கடி சாய்ந்து கொண்டும், மடியிலும் பக்கங்களிலும் அடுக்கிய தலையணைகளில் முழங்கைகளை ஊன்றி உள்ளங்கைகளினால் நெற்றியினைத் தாங்கிக் கொண்டு கூட்ட நடைமுறைகளை அவதானித்தபடி இருக்கிறார்கள். அவர்களுக்கு தொய்வு வருத்தம். குளிர்காலத்திலே இடையிடையே வருகின்ற ஒருவகைக் காசம் அது, மூச்சுவிட முடியாது. பேசவியலாது. வயிற்றைக் கொய்து வாங்குகின்ற பொல்லாத வருத்தம் காச வருத்தம்.

அ. கூட்டமண்டபத்தில் நாவலர் இருந்த விதம் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?

ஆ. நாவலருக்கு ஏற்பட்ட காசநோய் பற்றிக் குறிப்பிடுக.

v. பிற்காலத்தில் சமயசமரசக் கீர்த்தனைகள் என்றும், சமரசக் கொள்கைகள் என்றும் எங்கு உண்மையும் அழகும் உள்ளதோ அங்கிருந்து கருத்துக்களை நூலாசிரியர் எடுத்துத் தந்திருக்கின்றனர். பேராசிரியர் சேதுப்பிள்ளை திருக்காவலூர்க் கலம்பகத்தைப் பற்றியும், தேம்பாவணியைப் பற்றியும், சீறாப்புராணத்தைப் பற்றியும் தந்த கருத்துக்களைப் போல வேறு எவரும் எழுதியதாக நான் அறியேன். திரு.வி.கல்யாணசுந்தரமுதலியார், கிறிஸ்துவின் அருள்வேட்டல், புத்தரின் அருள்வேட்டல் போன்ற இலக்கியங்களைப்பாடி இன்புற்று வாழ்ந்தார். கவிமணி விநாயகம்பிள்ளை இயேசுவைப்பற்றி, புத்தரைப்பற்றிப் பாடியுள்ளார்.

அ. பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள் எந் நூல்களைப்பற்றி தமது கருத்துக்களை எழுதியுள்ளார்?

ஆ. நூலாசிரியர் கருத்துக்களை எங்கிருந்து பெற்றுத் தந்துள்ளனர்?

(20 புள்ளிகள்)

**3. கிருட்டிணன் தூதுச்சருக்கத்தில்,**

அ. தருமனின் சமாதான எண்ணம்

ஆ. திரௌபதி எனும் பாத்திரப் படைப்பு

என்பவற்றை விளக்குக.

**அல்லது**

**குகப்படலப்** பகுதயில்,

அ. குகனின் சிறப்புக்கள்

ஆ. கம்பரின் அணிப்பிரயோகப் பயன்பாடு

என்பன புலப்படுமாற்றை தெளிவுறுத்துக. (15 புள்ளிகள்)

4. **கம்பியூட்டர்** சிறுகதையில்,

அ. கதாசிரியரின் குணப்பண்புகள்

ஆ. கதையில் இழையோடும் நகைச்சுவை உணர்வுகள்

ஆகியனவற்றை விளக்குக.

**அல்லது**

**தமிழ்ப்பண்பாடு** என்ற கட்டுரையில்,

அ. தமிழர் பண்பாட்டின் சிறப்பியல்புகள்

ஆ. புறநானூறு கூறும் தமிழர் பண்பாட்டின் கொள்கைகள்

என்பவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

- **5,6,7** ஆகிய வினாக்களுள் ஏதாவதொன்றைத் தெரிவுசெய்து விடை எழுதுக.

5. **நாட்டார் பாடல்களை** அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ. மீனவர் பாடலில் மீனவர்களின் கடின உழைப்பு

ஆ. காதல் பாடலில் தலைவி மீதான தலைவனின் காதல் உணர்வு

ஆகியன வெளிப்படுமாற்றை விபரிக்குக.

6. **நீதிப்பாடல்களை** அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ. **'யானை அனையவர்..'** என்ற பாடலில் நல்ல நட்பு, தீய நட்பு

ஆ. **'உப்பில்லாக் கஞ்சியினை.'** என்ற பாடலில் மன நிறைவின் வெளிப்பாடு

7. **இலட்சியமும் சமநோக்கும்** என்ற கட்டுரையில்

அ. இலட்சியங்களைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகள்

ஆ. அருச்சுனனின் இலட்சியநெறி

என்பன புலப்படுமாற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

***